சூழலியல் நோக்கில் அகநானூற்றில் புல்

முனைவர் இரா. பிரபாகர்
உதவிப் பேராசிரியர், தமிழத்துறை
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி, இராபுரம், நாமக்கல் மாவட்டம்
DOI: https://doi.org/10.5281/zenodo.19220451

சங்க கால மனிதன் இயற்கையோடு இணைந்தவாழ்வுவாழ்ந்தனர். இயற்கையில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு தன்னுடைய வாழ்வைத் தகவமைத்துக் கொண்டனர். உணவு தானிய உற்பத்தி முறை தோன்றி நிலவுடைமைக் காலத்திலும் தங்களுடைய உற்பத்தி முறை இயற்கையோடு இணைந்ததாகவே இருந்தது. இயற்கைச் சூழலுக்கு எவ்விதத்திலும் கேடு ஏற்படாதவாறு உற்பத்தியைப் பெருக்கினர். அனைத்து உயிர்களுக்கும் மதிப்பளித்தனர். அதனால் இயற்கை போற்றப்பட்டு நலமான வாழ்வு வாழ்ந்தனர் என்பதை அகநானூற்றில் இடம்பெற்ற புல்வகைகளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

சூழலியல் விளக்கம்

சூழலியல் (Ecology) என்பதை 1808ஆம் ஆண்டு ஹன்ஸ்ரெய்ட்டன் என்பவர் அறிமுகப்படுத்தினார். ஆனால் எர்னஸ்ட் ஹேகல் என்பவர் தான் சூழலியல் என்பதற்கு வரையறையை வகுத்துக் கொடுத்தார். அஃதாவது "உயிரினத்திற்கும் அதனைச் சூழ்ந்துள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற காரணிகளுக்கும் இடையிலான உறவு முறையாகும்"[1] என்று குறிப்பிட்டுள்ளார். எனவே ஓர் உயிரனத்தைச் சூழ்ந்துள்ள மற்ற உயிரினங்களின் மற்றும் உயிரற்ற பொருளுக்கான தொடர்பை நாம் சூழலியல் என்று எடுத்துக் கொள்ளலாம்.

தாவரங்கள்

"தாவரம்" என்ற சொல் ஸ்தாபர (ஸ்தாவர) என்ற சமஸ்கிருதச் சொல்லின் திரிவு வடிவ தமிழ்ச்சொல்என்றுகருதப்படுகிறது. எனவே இவற்றைப் பற்றி ஆராய்யும் இயல் தாவரவியல் என்று அழைக்கப்படுகிறது."[2] "செடி, செடிமவியல்"[3] என்று பி.எல்.சாமி குறிப்பிடுவது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. தாவரங்களை,

1. *புல்வகைகள்*
2. *செடி, கொடி வகைகள்*
3. *மர வகைகள்*

என மூன்றாகப் பகுக்கலாம். ஆனால் அதன் பண்பு அடிப்படையில் க்கும் தாவரங்கள், வா தாவரங்கள் என இரு வகையாகத் தாவரவியலாளர்கள் பிரிப்பர். தொல்காப்பியர் உயிரின வகைப்பாட்டில்

"புல்லும் மரனும் ஓரறிவி னவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"[4]

என்று கூறுகிறார். இதில் புல், மரம் என்னும் இரண்டைச் சொல்லி அவற்றிற்கு ஓரறிவு என்று உரைத்துள்ளார். மேலும் புல்லுக்கும் மரத்திற்கும் வேறுபாட்டை அவரே மொழிந்துள்ளார். அஃதாவது,

"புறக்கா ழனவே புல்லெனப் படுமே"[5]
"அகக்கா ழனவே மரமெப் படுமே"[6]

என்று விளக்கம் அளித்துள்ளார். இந்நூற்பாவின் வழி கிளைகளின் நேராக வளர்வனவற்றைப் புல் என்றும் பல கிளைகளைக் கொண்டு வளர்வனவற்றை மரம் என்றும் குறிப்பிடுள்ளார். மேலும் புல்லின் உறுப்புகளாக,

"தோடே மடலே ஓலை என்றா
ஏடே இதழே பாளை என்றா
ஈர்க்கே குலையே நேர்ந்தன பிறவும்
புல்லோடு வருமெனச் சொல்லினர் புலவர்"[7]

சுட்டிக் காட்டியுள்ளார்.

தாவரமும் சூழலியலும்

மியில் தாவர இனங்கள் தோன்றி சுமார் 400 மில்லியன் ஆண்டுகள் இருக்கலாம் என அறிஞர்கள் கருதுகின்றனர். மியில் இருக்கக் கூடிய அனைத்து உயிரினங்களும் மியின் சொத்து. அவற்றின் தோற்றம், வளர்ச், பரிணாமம் ஆகியன இயற்கையின் விதிப்படி நிகழ்கின்றன. இவை தோன்றிய காலம் முதல் சூழலுக்குத் தக்கவாறு ஒவ்வொரு தாவர இனங்களும் ஒத்திசைவு கொண்டு ரான வாழ்வைக் கொண்டிருக்கின்றன. உயிரினங்கள் அனைத்தும் தங்களின் தேவைக்கேற்ப ஒன்று மற்றோன்றைச் சார்ந்து இருப்பதால் சூழல் மண்டலம் தொடர்ந்து பாதுகாக்கப்படுகிறது. சங்க காலத்தில் மனிதனும் அவ்வாறே இயற்கையோடு இயைந்தே வாழ்ந்தான் என்பதை அகநானூற்றில் களிற்றியானை நிரையில் இடம்பெற்ற புல்வகைகளைக் கொண்டு பற்றிக் காண்போம்.

புல் வகை

புல் என்பது ஒரு வித்திலைத் தாவரத்தைக் குறிக்கும். பொதுவாக இது நிலத்திலிருந்து வெளிவரும் போதே ஒடுங்கிய இலைகளைக் கொண்ட செடி வகையைச் சார்ந்தது. இது பச்சை நிறத்தில் காணப்படும். அகநானூற்றுக் களிற்றியானை நிரையில்

- கரும்பு
- பைஞ்சால்
- மூங்கில்
- வேழம்

ஆகியன இடம்பெற்றுள்ளன.

கரும்பு

கரும்பு புல் இனக் குடும்பத்தைச் சேர்ந்த உயரமாக, வற்றாத தாவரமாகும். இது நீர் வளமும் நில வளமும் கூடிய இடத்தில் நன்கு செழித்து வளரக்கூடிய மருத நிலத் தாவரமாகும். காற்றாற்றுக்கரைகளிலும் வயல்களிலும் வளரும் என்பதை,

"துவலை தூவல் கழிய, அகல்வயல்
நீடுகழைக் கரும்பின் கணைக்கால் வான்க்"[8]

என்று கீரன் எயிற்றியார் குறிப்பிடுகிறார். இக்கரும்பைக் கொண்டு நெல் மூட்டைகளை ஏற்றிச் செல்லும் வண்டியானது சேற்றில் மாட்டிக் கொள்ளாமல் இருக்க இக்கரும்பினை அடுக்கி வைத்து அதன் மேல் வண்டியினை ஓட்டிச் செல்வர் என்பதனை,

"அரிந்துகால் குவித்த செந்நெல் வினைஞர்
கட்கொண்டு மறுகும் சாகாடு அளற்றுஉறின்
ஆய்கரும்பு அடுக்கும் பாய்புனல் ஊர"[9]

என்கிறார் பரணர். கரும்பு நெல்முட்டைகளை ஏற்றப்பட்ட வண்டிக்குப் பாலம் போல இருந்துள்ளது என்பது தெரிய வருகிறது. இது சூழலியல் அடிப்படையில் உடைந்து சேதாரமாகிய கரும்பு மஃகி விரைவில் மண்ணுக்கு உரமாக மாறும் தன்மையுடையது. உடைந்த கணுக்கள் மீண்டும் துளிர்விட்டு கரும்பாக வளரும் தன்மை பெற்றது. எனவே எந்த வகையிலும் எந்த உயிரினத்திற்கும் எவ்வகையிலும் ங்கு ஏற்படாது என்பது புலப்படுகிறது.

பைஞ்சாய்

இது ஒரு கோரைப்புல் வகையைச் சேர்ந்ததாகும். எருவை என்றும் வழங்குவர். இதன் "மலர் றியது', தோடு போன்றது, கார்காலத்தில் மலர்வது, மலைப்புறத்திலும் காணப்படுவது"[10] எனக் குறிப்பிடுகிறார் கு.றிவாசன். இது பவளம் போன்ற நிறத்தையுடையது என்று பரணர்,

"அய்த்துவளர் பைஞ்சாய் முருந்தின் அன்ன
நகைப் பொலிந்து இலங்கும் எயிறுகெழு
துவர்வாய்"[11]

என்ற வரிகளில் புலப்படுத்தியுள்ளார். இவ்வரியில் ஒளியால் றந்த விளங்கும் பற்களையுடையத் தலைவியின் பவளம் போன்ற வாயானது நீர்நிறைந்து காணப்படும் கரையில் வளரும் பைஞ்சாய்க் கோரையின் குருத்தினைப் போல் காட் தருவதாகக் குறிப்பிடுகிறார். இதில் தலைவியின் பற்களின் வெண்மையைக் குறிக்க இயற்கையில் காணப்படும் பைஞ்சாய் கோரையின் வெண்மையான வேரினை உவமையாகக் காட்டுவது இயற்கையோடு இணைந்த வாழ்வைக் காட்டுவதாகும்.

மூங்கில்

தாவர இனங்களில் மூங்கில் புல் வகையைச் சேர்ந்தது. மிகவும் பெரியதாக வளரக்கூடியது. வலிமை வாய்ந்தது. இதனை சங்க இலக்கியங்கள் அமை, உந்தூழ், கழை, பனை, முளை, வேரல், வேய் எனப் பல பெயர்களில் குறிப்பிடுகின்றன. புறக்காழ் உவமையாலும் புல் வகையைச் சேர்ந்தது எனலாம். இது ஒரு வலிய பல்லாண்டு வாழ்ந்து ஒரு முறை க்கும் புதர்ச் செடி. மூங்கில்கள் பெரும்பாலும் தலைவனின் தோள் வலிமைக்கும் தலைவியின் தோள் அழகுக்கும் (வளவளப்பான) உவமையாகச் சொல்லப்பட்டுள்ளது. இதனை,

"வேய்மருள் பணைத்தோள் நெகிழச் சேய்நாட்டு"[12]

"குன்ற வேயின் திரண்ட என்"[13]

என மாமூலனார் பாடியிருப்பதிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது. மேலும் நன்கு விளைந்த மூங்கிலில் கிடைக்கும் அரியை நெய்யுடன் சேர்த்து உண்டனர் என்பதை,

"ஒலிகழை நெல்லின் அரியோடு ஓராங்கு ஆன்நிலைப் பள்ளி அளைசெய்து அட்ட"[14]

என்று காவிரிப்பம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் வெளிப்படுத்தியுள்ளார். எனவே குறிஞ் நில தாவரமாக விளங்கும் மூங்கில் தலைவனின் தோள் வலிமைக்கும், தலைவியின் தோள் அழகிற்கும் உவமையாகக் காட்டப்பட்டிருப்பதையும் அதிலிருந்து கிடைக்கும் அரி றப்புமிக்க ஒன்றாக விளங்கியதையும் அறிய முடிகிறது. இது இயற்கையோடு இயைந்த வாழ்வுக்கு உதாரணமாக விளங்குகிறது.

வேழம்

வேழம் புல் வகையைச் சேர்ந்த தாவரமாகும். இதனை, வேழக்கரும்பு என்றும், கொறுக்கச் என்றும் கூறுவர். இன்று "கொறுக்காந்தட்டி" என்றும் நாம் வழங்குகிறோம். இதன் மலரானது கரும்பின் மலரைப் போல வெண்மையானது என்பதை பரணம்.

"கரைசேர் வேழம் கரும்பிற் க்கும்"[15]

என்கிறார். மேலும் தலைவியின் முக மலர்ச்சியைச் சொல்லும்போது,

"வேழ வெண்புணை தழீஇயப், ழியர் கயம்நாடு யானையின் முகனமர்ந் தாங்கு"[16]

என்றுரைக்கிறார். அஃதாவது கரும்பினாலான வெண்மையான தெப்பத்தின் மீது ஏறி, ழியரின் குளத்தை நாடிச் செல்லும் யானையைப் போன்றது முக மலர்ச்யுடன் காணப்பட்டாள் என்கிறார். ஆக, முகமலர்ச்க்கு வேழமானது உவமையாக்கப்பட்டுள்ளது தெளிவாகிறது. இயற்கையாக கிடைக்கும் பொருளையே சங்க கால புலவர்கள் உதாரணமாகக் காட்டியுள்ளார் என்பது தெரிய வருகிறது.

தொகுப்புரை

நம்மை சுற்றியுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்களுடன் நாம் கொள்ளுகின்ற உறவைக் குறிப்பது சூழலியல் என்று கூறலாம். தாவரங்களைப் புல், செடி, கொடி, மரம் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

இவற்றில் ஓரறிவு உயிரினம் என்கிறார் தொல்காப்பியர். அவற்றிற்கு தோடு, மடல், ஓலை, ஏடு, இதழ், பாளை என்னும் உறுப்புகள் உடையது என்று வரையறுக்கிறார்.

உலகில் தோன்றிய ஒவ்வொரு உயிரினமும் ஒன்றை ஒன்று சார்ந்து வாழ்வதால் தான் இந்தச் சூழ்நிலை மண்டலம் பாது காக்கப்படுகிறது. ஒரு வித்திலை தாவர வகை சேர்ந்தது. கரும்பு, பைஞ்சால், மூங்கில் ஆகியன அகநானூற்று களிற்றியானை நிரையில் இடம்பெற்றுள்ளன.

சேற்றில் புதையும் வண்டிச் சக்கரங்களைப் புதையாத வகையில் கரும்பைக் கொண்டு வண்டியை ஓட்டிச் சென்றாலும் அதன் உடைந்த கணுக்கள் மீண்டும் துளிர்விட்டு வளரும் தன்மையுடையது என்பதால் சூழலுக்கு எவ்விதத்திலும் ங்கு ஏற்படுவதில்லை.

பைஞ்சாய் என்பது கோரைப்புல் வகையைச் சேர்ந்தது. இது இன்று இருக்கும் நிலத்திற்கு ங்கு செய்யும் கோரையன்று, இதன் வேரின் வெண்மை தலைவியின் பற்களுக்கு உவமையாகக் காட்டப்பட்டுள்ளது.

புதராக வளரும் தாவரம் மூங்கில், இது தலைவன் தலைவியின் தோளுக்கு உவமையாக்கப்பட்டாலும் அதில் கிடைக்கும் அரி மனிதனுக்கு உணவாகப் பயன்பட்டதையும் அறிய முடிகிறது. உணவுக்காக ஒரு மூங்கில் கிளை வெட்டப்பட்டாலும் அதன் போத்து துளிர்விட்டு அடுத்த மூங்கில் கிளை வளரும் தன்மையுடையது. அதனால் தான் மண மக்களை வாழ்ந்தும் போது "மூங்கில் போல கிளை கிளைத்துசுசு என்று கூறுகின்றனர்.

வெண்மை நிறத்திற்கு உதாரணமாக வேழத்தின் க்கள் காட்டப்பட்டுள்ளது.

முடிவுரை

சங்க காலத்தில் புலவர்கள் இயற்கையை நன்கு உற்றுக் கவனித்திருக்கின்றனர். அதனால் தான் பொருத்தமான ஒன்றை உவமைப்படுத்தியிருக்கின்றனர். இயற்கையோடு இணைந்து இயைந்து வாழ்ந்திருக்கின்றனர். இந்தச் சூழ்நிலை மண்டலமும் நன்கு பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதை அகநானூற்று களிற்றியானை நிரையில் இடம்பெற்ற புல் வகையிலிருந்து அறிய முடிகிறது.

அடிக்குறிப்புகள்

1. சுலா அப்பாதுரை, சுற்றுச்சூழல் கல்வி, ப.எண்.1.
2. கிருஷ்ணக்குமார், தமிழக சுற்றுச்சூழல், ப.எண்.9.
3. பி.எல்.சாமி, சங்க கால தாவரங்கள், ப.18.
4. தொல்காப்பியம், பொருளதிகாரம், நூ.572.
5. மேலது., நூ.630.
6. மேலது., நூ.631.
7. மேலது., நூ.632.
8. அகநானூறு, பா.217, வரி.3-4.
9. மேலது., பா.116, வரி.2-4.
10. கு.னிவாசன், சங்க இலக்கியத் தாவரங்கள், ப.723.
11. அகநானூறு, பா.62, வரி.1-2.
12. மேலது., பா.1, வ.8.
13. மேலது., பா.15, வ.18.
14. மேலது., பா.107, வரி.7-8.
15. ஐங்குறுநூறு, பா.12, வ.1.
16. அகநானூறு, பா.6, வரி.8-9.

துணை நூற்பட்டியல்

1. சாமி பி.எல்., சங்க இலக்கியத்தில் செடி, கொடி விளக்கம், சைவந்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1987.
2. னிவாசன் கு., சங்க இலக்கியத்தில் தாவரங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சார், ப.ஆ.1986.
3. சுலா அப்பாத்துரை, சுற்றுச்சூழல் கல்வி, நிசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, ப.ஆ.2017.
4. செம்மொழித் தமிழ், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சார்.
5. பசுமைக்குமார், தமிழக சுற்றுச்சூழல், தாமரைப் பப்ளிகேசுன்ஸ், சென்னை, ப.ஆ.2007.